ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2086/34 - 2018 අගෝස්තු මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.08.30

*2086/34 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடமேல் மாகாண மாகாண சபை

*வடமேல் மாகாண மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் .......... ஆம் இலக்க வடமேல் மாகாண கைத்தொழில் சேவைகள் பணியக நியதிச் சட்டத்தைத் திருத்துதல்*

இங்கு கீழ் பிரசுரிக்கப்படும் வடமேல் மாகாண மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் .......... ஆம் இலக்க வடமேல் மாகாண கைத்தொழில் சேவைகள் பணியக நியதிச்சட்டம் இன்றைய தினத்திலிருந்து முப்பது நாட்கள் முடிவடைந்ததன் பின்னர் வடமேல் மாகாண மாகாண சபைக்குச் சமர்ப்பிக்கப்படுமென இத்தால் அறிவிக்கின்றேன்.

எவரேனும் ஒருவருக்கு இந்த நியதிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் தொடர்பில் முன்வைப்பதற்கு ஏதேனும் விடயமொன்று இருப்பின், அதனை அன்றைய தினத்துக்கு முன்னர் எனக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

டி. ஜீ. பி. எம். தர்மசிறி தசநாயக்க,
வடமேல் மாகாண முதல் அமைச்சரும், நிதி, திட்டமிடல்,
பொறியியல் சேவை, சட்டம் மற்றும் ஒழுங்கு, கல்வி,
உள்ளூராட்சி, மாகாண நிருவாகம், பொருளாதார மேம்பாடு,
சுற்றாடல் அலுவல்கள், நீர் வழங்கல் மற்றும் விநியோக,
சுற்றுலாத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சரும்.

வடமேல் மாகாண பிரதான அமைச்சு,
நிதி, திட்டமிடல், பொறியியல் சேவை, சட்டம் மற்றும்
ஒழுங்கு, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிருவாகம்,
பொருளாதார மேம்பாடு, சுற்றாடல் அலுவல்கள்,
நீர் வழங்கல் மற்றும் விநியோக, சுற்றுலாத்துறை
அலுவல்கள் அமைச்சு,
1 ஆம் மாடி,
வடமேல் மாகாணஅலுவலக கட்டிடத் தொகுதி,
குருநாகல்,
2018, ஓகத்து 23.

1A - PG 4195 — 42 (2018/08)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**2018 ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்க வடமேல் மாகாண கைத்தொழில் சேவைகள் பணியக (திருத்த) நியதிச் சட்டம்**

*2003 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, வடமேல் மாகாண கைத்தொழில் சேவைகள் பணியக நியதிச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வடமேல் மாகாண கைத்தொழில் சேவைகள் பணியக நியதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானவொரு நியதிச் சட்டமாகும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கான ஒன்பதாம் அட்டவணையில் I ஆம் நிரலில் (மாகாணசபை) 21 ஆம் உறுப்புரைக்கு அமைவாகக் கிடைக்கப்பெற்றுள்ள தத்துவத்தின் பிரகாரம் வடமேல் மாகாண மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.*

*சுருக்கப் பெயரும் வலுவுக்கு வரும் திகதியும்.*

*1.* இந்த நியதிச் சட்டம் 2018 ஆம் ஆண்டின் .......... ஆம் இலக்க வடமேல் மாகாண கைத்தொழில் சேவைகள் பணியக (திருத்த) நியதிச் சட்டமென அழைக்கப்படுவதோடு, ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதும் இது அமுலுக்கு வருதலும் வேண்டும்.

*1990 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நியதிச் சட்டத்தின் நீண்ட பெயரைப் பதிலீடு செய்தல்.*

*2.* இதனகத்துப் பின்னர் முதன்மை நியதிச் சட்டம் எனக் குறிப்பிடப்படுகின்ற 2003 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நியதிச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, வடமேல் மாகாண கைத்தொழில் சேவைகள் பணியக நியதிச் சட்டத்தின் நீண்ட பெயருக்குப் பதிலாகப் பின்வரும் நீண்ட பெயர் பதிலீடு செய்யப்படுவதன் மூலம் திருத்தப்படுகின்றது :-

> "வடமேல் மாகாண மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில், தொழில் முயற்சி அபிவிருத்தியின் ஊடாக பொருளாதார அபிவிருத்தியை துரிதப்படுத்தும் பொருட்டு கைத்தொழில் சேவைகள் பணியகத்தைத் தாபிப்பதற்கும் இவற்றுடன் தொடர்புள்ள இடைநேர்விளைவான விடயங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு நியதிச் சட்டமாகும்."

*முதன்மை நியதிச் சட்டத்தின் 1 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

*3.* முதன்மை நியதிச் சட்டத்தின் 1 ஆம் பகுதியில் உள்ள "வடமேல் மாகாணத்தில் கைத்தொழில் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற கட்டளையொன்றின் மூலம் பிரகடனப்படுத்தப்படுகின்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆளுநரினால் அங்கீகரிக்கப்படுகின்ற" என்னும் சொற்களைப் பதிலீடு செய்வதன் மூலம் திருத்தப்படுகின்றது.

*முதன்மை நியதிச் சட்டத்தின் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் 5 ஆம் 6 ஆம் 7 ஆம் பிரிவுகளைப் பதிலீடு செய்தல்.*

*4.* முதன்மை நியதிச் சட்டத்தின் பகுதி I இல் உள்ள 2 ஆம் 3 ஆம் 4 ஆம் 5 ஆம் 6 ஆம் 7 ஆம் பிரிவுகளை நீக்கி அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகளை பதிலீடு செய்வதன் மூலம் இந்த நியதிச் சட்டமானது திருத்தப்படுகின்றது :-

"கைத்தொழில் சேவைகள் பணியகம்."

*2.* (1) இந்த நியதிச் சட்டத்தினால் (இதனகத்துப் பின்னர் பணியகம் என அழைக்கப்படுகின்ற) "வடமேல் மாகாண கைத்தொழில் சேவைகள் பணியகம்" என்னும் பெயர் கொண்ட பணியகமொன்று இத்தால் தாபிக்கப்படும்.

(2) பணியகம் இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையும் கொண்ட (1) ஆம் உப பிரிவில் வழங்கப்பட்டுள்ள அத்தகைய பெயர் கொண்டு வழக்குத் தொடரப்படுவதற்கு அல்லது அதற்கெதிராக வழக்குத் தொடரவும் இயலுமான கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமொன்றாகும்.

பணியகத்தின் நோக்கம்.

*3.* (2) பணியகத்தின் நோக்கங்கள் பின்வருமாறாகும் :

(அ) தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்தலும் ஊக்குவித்தலும் ;

(ஆ) கூடிய பொருளாதார அபிவிருத்திக்காக மாகாணத்திற்குள் தொழில் முயற்சியாளர்களைக் கவர்ந்திழுப்பதற்கு நட்புறவுமிக்க சூழலை உருவாக்குதல் ;

(இ) தொழில் முயற்சியாளர்களுக்கும் தொழில் முயற்சிகளுக்கும் தேவைப்படும் வர்த்தக அபிவிருத்திச் சேவைகளை வழங்குதல் ;

(ஈ) தொழில் முயற்சிகளில் பகிரங்க தனியார் கூட்டுத் தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல் ;

(உ) உள்நாட்டு அல்லது வெளிநாட்டுக் கருத்திட்டங்களை இனங்காணுதல், திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல், மதிப்பிடுதல்.

4. பின்வரும் பணிகள் அடங்கலாக பணியகத்தின் நோக்கங்களை அடையும் பொருட்டு பணியகத்தினால் தேவையான எல்லாப் பணிகளும் நிறைவேற்றப்படுதலும் வேண்டும் :- பணியகத்தின் பணிகள்.

(அ) கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தியை ஊக்குவித்தலும் தேவைப்படும் பணிகளை நிறைவேற்றுதலும் ;

(ஆ) ஊக்குவிப்புத் திட்டங்கள் மற்றும் அடிப்படை வசதிகளைக் கொண்ட துரித பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு உகந்த நட்புறவுமிக்க முதலீட்டுச் சூழலை உருவாக்குதல் ;

(இ) ஒப்பேறு வள வாய்ப்புள்ள கருத்திட்டங்களை அறிந்து கொண்டும் தேவைப்படும் வர்த்தக அபிவிருத்திச் சேவைகளை வழங்கியும் மாகாணத்திற்குள் தொழில் முயற்சியாளர்களையும்/முதலீட்டாளர்களையும் கவர்ந்திழுத்தல் ;

(ஈ) வர்த்தகத் தேர்ச்சி சம்பந்தப்பட்ட பயிற்சிகள், கல்வி நடவடிக்கைகள், பயிற்சியளிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள், மாநாடுகள், சம்மேளனங்கள், செயலமர்வுகள், கல்விச் சுற்றுலாக்கள், அறிவு மற்றும் தகவல்களைப் பரப்புதல் போன்றவற்றுக்குரிய நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் ;

(உ) வர்த்தக, சந்தை ஊக்குவிப்புக்காக வர்த்தக சந்தைகளை வர்த்தக தூதுக்குழுக்களை ஒழுங்குசெய்தல், கூட்டிணைத்தல் அத்துடன் அவற்றில் கலந்துகொள்ளுதல் ;

(ஊ) சந்தைப்படுத்தல் சம்பந்தமான உதவிகளை எதிர்பார்க்கும் தொழில் முயற்சியாளர்களிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற கோரிக்கைகள் தொடர்பில் செயலாற்றுதல், சந்தை வசதியுள்ள துறைகளுக்குரிய உற்பத்திகளை ஊக்குவிப்பதற்குத் துணைபுரிதல் ;

(எ) பணியகத்தின் நோக்கங்களை அடையும் போதும் நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ளும் போதும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடை வழங்கும் நிறுவனங்களுடனும் அரச சார்பற்ற அமைப்புக்களுடனும் இணைந்துகொள்ளுதலும் இதன் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களுக்கு முகாமைத்துவ மற்றும் மதியுரைச் சேவைகளை வழங்குதலும் ;

(ஏ) தர அபிவிருத்தி, உற்பத்தி திறன் ஆகியவற்றை விருத்தி செய்வதற்காக முகாமைத்துவ, உற்பத்தி மற்றும் விநியோகம் தொடர்பில், புதிய வழிமுறைகளை உபயோகப்படுத்துவதற்குத் துணை புரிதல் ;

(ஐ) சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான தொழில் முயற்சியாளர்களின் கைத்தொழில் மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளுக்குத் தேவையான தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்குதல் ;

(ஒ) அரசாங்க மற்றும் தனியார் துறை சார்பில் தொழில்நுட்ப அறிக்கைகள், மதிப்பீட்டு அறிக்கைகள், விலைமதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் சாத்திய தகவாய்வு அறிக்கைகள் போன்றவற்றைத் தயாரித்தல் ;

(ஓ) தேசிய கொள்கைக்கு அமைவாக பணியகத்தின் நிலைபேறான தன்மை மற்றும் எதிர்கால செயற்பாடுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் அதன் ஊடாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குமாக மாகாணத்தினுள்ளும் மாகாணத்திற்கு வெளியேயும் நடவடிக்கைகளை எடுத்தல்.

பணியகத்தின் பொறுப்புக்கள்.

5. முதன்மை நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயமொன்று அல்லது எல்லா விடயங்களும் சம்பந்தமாக முதலமைச்சரினால் பணியகத்துக்குத் தொடர்புபடுத்தப் படுகின்ற விடயங்கள் சம்பந்தமாக ஆலோசனை வழங்குவது பணியகத்தின் பொறுப்பாதல் வேண்டும்.

பணியகத்தின் தத்துவங்கள்.

6. சொந்தப் பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும் நியாயமாகத் தேவைப்படும் தத்துவங்கள் பணியகத்துக்கு உள்ளதோடு, விசேடமாகப் பின்வரும் தத்துவங்கள் பணியகத்துக்கு இருத்தலும் வேண்டும் :-

(அ) ஏதேனும் அசையா அல்லது அசையும் சொத்துக்களை உடைமையாக்கிக் கொள்ளுதல், குத்தகைக்கு எடுத்தல், வாடகைக்கு எடுத்தல் அல்லது வாடகைக்கு விடுதல், ஈடுவைத்தல், பிணை வைத்தல் ;

(ஆ) பணியகத்தின் நோக்கங்களுக்காக ஆளுநர் சபையினால் அங்கீகரிக்கப்படும் அத்தகைய ஏதேனும் வங்கியொன்றில் நடைமுறைக் கணக்குகளை, சேமிப்புக் கணக்குகளை அல்லது வைப்புக் கணக்குகளைத் திறத்தலும் நடாத்திச் செல்லுதலும் ;

(இ) ஆளுநர் சபையினால் அங்கீகரிக்கப்படும் அத்தகைய ஏதேனும் வங்கியொன்றில் அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்குத் தேவைப்படக்கூடிய நிதியினைக் கடனாகப் பெற்றுக்கொள்ளல் ;

(ஈ) கைத்தொழில்களை/ தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் அபிவிருத்தி செய்யும் நிலையங்களைத் தாபித்தலும் தொழிற்படுத்தலும் ;

(உ) பணியகத்தின் நோக்கங்களை அடையும் பொருட்டு கூட்டு உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்த உடன்படிக்கைகளை அல்லது ஒத்துழைப்பு உடன்படிக்கைகளை செய்துகொள்ளுதல் ;

(ஊ) தொழில் முயற்சி அபிவிருத்தியின் எல்லாத் துறைகள் தொடர்பிலும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், அதற்காக உதவுதல், ஒருங்கிணைத்தல், துணைபுரிதல் ;

(எ) பணியகத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக கட்டணங்களை அல்லது கூலிகளை அறவிடுதல் ;

(ஏ) பணியகத்துக்காக ஆற்றப்படுகின்ற சேவைகளுக்காக கட்டணம் அல்லது கூலி செலுத்துதல் ;

(ஐ) சொந்த பணியாளர்களின் நியமிப்பு, பயிற்சியளிப்பு, பதவியுயர்வு, ஊதியம் செலுத்துதல், அவர்களது ஒழுக்காற்று நடவடிக்கை, நடத்தை அத்துடன் அவர்களுக்கு விடுமுறை வழங்குதல் தொடர்பில் விதிகளை ஆக்குதல் ;

(ஒ) தமது பணியாளர்கள் சார்பில் பணிக்கட்டளைகளை உருவாக்குதல், அவர்களது செயலாற்றுகையை மதிப்பிடுதல் அத்துடன் தேவையான மாற்று வழிகளை எடுத்தல் ;

(ஓ) பணியகத்தின் நோக்கங்களை அடையும் பொருட்டு தேவையான இயந்திர சாதனங்களையும் உபகரணங்களையும் இறக்குமதி செய்தல், பணியகத்தின் பணிகளுக்குத் தேவைப்படும் உபகரணங்கள், நிதி உட்பட பிற உதவிகளை ஏற்றுக்கொள்ளல் ;

(ஔ) பணியகத்தின் நோக்கங்களை நிறைவேற்றுகையில் ஏதேனும் அசையா சொத்தை அல்லது காணியினை உரித்து மாற்றம் செய்வதற்கு தேவைப்படும் பணத்தொகையை பணியகத்தினால் ஏற்றுக்கொள்ளுதல் ;

(க) தேவையான சந்தர்ப்பங்களில் வெளிவாரி ஆலோசகர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளுதலும் அதற்காக கொடுப்பனவுகளைச் செய்தலும் ;

7. தமது பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான திணைக்களங்களை, பிரிவுகளை, முகவராண்மைகளை பணியகத்தினால் தாபித்து நடாத்தி செல்லப்படலாம். பணியகத்தின் திணைக்களங்கள், பிரிவுகள், முகவராண்மைகள்.

5. முதன்மை நியதிச் சட்டத்தின் பகுதி II இன் தலைப்பாகிய "பணியகத்தின் சபை" என்பதற்குப் பதிலாக "பணியகத்தின் ஆளுநர் சபை" என்னும் புதிய தலைப்பு இத்தால் பதிலீடு செய்யப்படுகின்றது. முதன்மை நியதிச் சட்டத்தின் பகுதி II இன் தலைப்பை பதிலீடு செய்தல்.

6. முதன்மை நியதிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவை நீக்கி அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவை பதிலீடு செய்வதன் மூலமும் திருத்தப்படுகின்றது. முதன்மை நியதிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. (1) பணியகத்தின் பணிகளினது நிருவாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு (இதனகத்துப் பின்னர் "ஆளுநர் சபை" என அழைக்கப்படும்) பணியகத்தின் ஆளுநர் சபைக்கு கையளிக்கப்படுதலும் வேண்டும். பணியகத்தின் ஆளுநர் சபை.

(2) பணியகத்தின் பணிகளை நிருவகிக்கும் நோக்கத்திற்காக ஆளுநர் சபையினால் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் பணியகத்திற்குக் கையளிக்கப்பட்டுள்ள, விதித்துரைக்கப்பட்டுள்ள அல்லது பொறுப்பளிக்கப்பட்டுள்ள சகல தத்துவங்கள், பணிகள் மற்றும் நோக்கங்களை செயற்படுத்தலாம், நிறைவேற்றலாம், புரியலாம்.

7. முதன்மை நியதிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் சேர்க்கப்படுவதோடு, இது முதன்மை நியதிச்சட்டத்தின் 8 அ ஆம் பிரிவாகச் செயல்வலுவுக்கு வருதல் வேண்டும். முதன்மை நியதிச் சட்டத்தின் 8 அ ஆம் பிரிவைச் சேர்த்தல்.

8(அ) (1) ஆளுநர் சபையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) உத்தியோகபூர்வ உறுப்பினர்கள் நால்வர் அதாவது -

(i) வடமேல் மாகாணத்தின் பிரதான செயலாளர் ;

(ii) வடமேல் மாகாண முதலமைச்சின் செயலாளர் ;

(iii) வடமேல் மாகாண கமத்தொழில் அமைச்சின் செயலாளர் ; அத்துடன்

(iv) வடமேல் மாகாண புடவைக் கைத்தொழில், சிறு கைத்தொழில் மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சின் செயலாளர்.

(ஆ) முதலமைச்சரினால் பிரதம நிறைவேற்று உத்தியோத்தரின் சிபாரிசினை கவனத்திற்கு எடுத்துக்கொண்டு நியமிக்கப்படும் (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" என அழைக்கப்படும்) ஐந்து உறுப்பினர்கள்:

(i) அரசாங்க அல்லது தனியார் துறையைச் சேர்ந்த வர்த்தக அல்லது அபிவிருத்தி வங்கியொன்றின் உதவி பொது முகாமையாளருக்கு குறையாத மட்டத்திலான பதவியொன்றில் சேவை புரியும் நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர் ஒருவர், வங்கித் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் பொருட்டு ;

(ii) வடமேல் மாகாணத்தில் அமைந்துள்ள முன்னோடி பாரிய அளவிலான உற்பத்தி கைத்தொழில் நிறுவனத்தின் உரிமை யாளர், நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர் ஒருவர், கைத்தொழில் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருட்டு ;

(iii) தனியார் துறையைச் சேர்ந்த பாரிய அளவிலான தொழில் முயற்சியொன்றின் உரிமையாளர், நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர் ஒருவர், வியாபாரத் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருட்டு ;

(iv) பல்கலைக்கழகம் ஒன்றில் சேவையாற்றும் முகாமைத்துவம் அல்லது பொருளியல் அல்லது கமத்தொழில் அல்லது பொறியியல் பற்றிய சிரேட்ட பேராசிரியர் அல்லது திணைக்களத் தலைவர் ஒருவர் அல்லது பீடாதிபதி ஒருவர் அல்லது தேசிய மட்டத்தில் கைத்தொழில், வர்த்தக மற்றும் வாணிபத் துறையின் கொள்கை திட்டமிடல் பற்றிய நிபுணர் ஒருவர் ;

(v) மாகாண அல்லது தேசிய மட்ட முன்னோடி நிறுவனமொன்றில் சேவையாற்றும் பட்டயம் பெற்ற கணக்காளர் ஒருவர்.

முதன்மை நியதிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்

8. முதன்மை நியதிச் சட்டத்தின் 09 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

மாகாண சபை உறுப்பினர் ஒருவர், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், உள்ளூராட்சி உறுப்பினர் ஒருவர், மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவர், வங்குரோத்து நிலையை அடைந்த ஒருவர் குற்றமொன்றிற்குக் குற்றவாளியென நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட ஆள் ஒருவர் பணியகத்தின் ஆளுநர் சபையின் உறுப்பினர் ஒருவராக செயலாற்றுவதற்கு தகைமையற்றவராவார்.

முதன்மை நியதிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்

9. முதன்மை நியதிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(i) இதன்கண்ணுள்ள "பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நியமிக்கப்படும் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும்" என்னும் சொற்களை பதிலீடு செய்தல்

"நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம்"

(ii) அதன் பக்க குறிப்புக்கு பதிலாக இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பக்க குறிப்பினைபதிலீடு செய்தல் :

*10.* முதன்மை நியதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவிலுள்ள "எவரேனும் உறுப்பினர் ஒருவருக்கு தற்காலிகமாக இயலாமற் போகுமாயின் 9 ஆம் பிரிவின் கீழ் முதலமைச்சரினால் அமைச்சருடன் உசாவுதலை மேற்கொண்டு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவருக்கு தற்காலிகமாக இயலாமற் போகுமாயின் 8 ஆம் 9 ஆம் பிரிவுகளிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் முதலமைச்சரினால் உறுப்பினர் ஒருவராக" என திருத்தப்படுகின்றது.

முதன்மை நியதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

*11.* முதன்மை நியதிச் சட்டத்தின் 12 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுவதோடு, அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவுகள் பதிலீடு செய்யப்படும் :-

முதன்மை நியதிச் சட்டத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவியிலிருந்து விலகுதல் மற்றும் நீக்குதல்."

12. (1) முதலமைச்சருக்கு முகவரியிட்டு அனுப்பப்படும் கடிதமொன்றின் மூலம் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவருக்கு தமது பதவியிலிருந்து விலகலாம் ;

(2) பொருத்தமானதென முதலமைச்சர் கருதும் சந்தர்ப்பங்களில் அதற்கான காரணங்களை குறிப்பிட்டு அவரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை நீக்கலாம்.

*12.* முதன்மை நியதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உப பிரிவிலுள்ள "உரிய அமைச்சருடன் உசாவுதலை மேற்கொண்டு" என்னும் சொற்களை நீக்குவதன் மூலமும் திருத்தப்படுகின்றது.

முதன்மை நியதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

*13.* முதன்மை நியதிச் சட்டத்தின் 15 ஆம் பிரிவுக்கு பின்வரும் புதிய பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலம் திருத்தப்படுகின்றது :-

முதன்மை நியதிச் சட்டத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(4) ஆளுநர் சபையின் தலைவருக்கு அறிவிக்காது ஆளுநர் சபையின் மூன்று கூட்டங்களுக்கு தொடர்ச்சியாக சமுகமளிக்க முடியாமற் போகின்ற பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவரின் உறுப்பாண்மையானது அவ்வாறு சமுகமளிக்காத மூன்றாவது கூட்டத்திற்கான திகதியிலிருந்து இல்லாதொழியும். அத்தகைய ஒருவர் மீண்டும் ஆளுநர் சபையின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு தகைமையற்றவராவார்."

*14.* முதன்மை நியதிச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (1) ஆம் (2) ஆம் உப பிரிவுகளில் "அமைச்சர்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "முதலமைச்சர்" என்னும் சொல்லை பதிலீடு செய்வதன் மூலம் இந்தப் பிரிவானது திருத்தப்படுகின்றது.

முதன்மை நியதிச் சட்டத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

*15.* முதன்மை நியதிச் சட்டத்தின் III ஆம் பகுதியிலுள்ள 23 ஆம் 24 ஆம் பிரிவுகளிலும் அவற்றின் பக்கக் குறிப்புகளிலும் எந்தவொரு இடத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ள "பணிப்பாளர்" என்னும் சொல்லை நீக்கி அதற்குப் பதிலாக "நிறைவேற்றுப் பணிப்பாளர்" என்னும் சொற்களை பதிலீடு செய்வதன் மூலம் இந்தப் பிரிவானது திருத்தப்படுகின்றது.

முதன்மை நியதிச் சட்டத்தின் 23 ஆம் 24 ஆம் பிரிவுகளைத் திருத்துதல்.

*16.* முதன்மை நியதிச் சட்டத்தின் 30 ஆம் பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவை பதிலீடு செய்வதன் மூலமும் திருத்தப்படுகின்றது :-

முதன்மை நியதிச் சட்டத்தின் 30 ஆம் பிரிவை பதிலீடு செய்தல்.

பணியகத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்தல்.

"30. பணியகத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்வது சம்பந்தமாக 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23 ஆம் பிரிவு ஏற்புடையதாகும்."

*முதன்மை நியதிச் சட்டத்தின் 31 ஆம் பிரிவைப் பதிலீடு செய்தல்.*

17. முதன்மை நியதிச் சட்டத்தின் 31 ஆம் பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவை பதிலீடு செய்வதன் மூலமும் திருத்தப்படுகின்றது :-

"முகாமைத்துவ கணக்காய்வு

31. பணியகத்தின் நோக்கங்களை அடைவதில் எவ்வளவு தூரம் அது வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளதென்பதை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஆளுநர் சபையினால் உரிய தகைமைகளைக் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளலாம். முகாமைத்துவ கணக்காய்வாளர்களின் சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டு ஆளுநர் சபையினால் பணியகத்தின் முகாமைத்துவத்துக்கு வழங்கப்படும் ஆலோசனைகள் முகாமைத்துவத்தினால் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்."

*முதன்மை நியதிச் சட்டத்தின் 32 ஆம் பிரிவைப் பதிலீடு செய்தல்.*

18. முதன்மை நியதிச் சட்டத்தின் 32 ஆம் பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவை பதிலீடு செய்வதன் மூலமும் திருத்தப்படுகின்றது :-

"ஆண்டறிக்கை.

32. நிதியாண்டுகளின் இறுதியில் அந்த ஆண்டுக்குள் பணியகத்தினால் நிறைவேற்றப்பட்ட பணிகள் தொடர்பிலான ஆண்டறிக்கையினை தயாரித்து முதலமைச்சருக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்பதோடு, இயைபுள்ள நிதியாண்டு முடிவடைந்து பன்னிரெண்டு மாதங்கள் செல்வதற்கு முன்னர் இந்த ஆண்டறிக்கையை மாகாண சபைக்குச் சமர்ப்பிப்பதற்கு முதலமைச்சரினால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்."

*முதன்மை நியதிச் சட்டத்தின் 34 ஆம் பிரிவைப் பதிலீடு செய்தல்.*

19. முதன்மை நியதிச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடொன்றில் "சபை" என்னும் சொல் உள்ள எல்லா இடங்களிலும் அதற்குப் பதிலாக "ஆளுநர் சபை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் முதன்மை நியதிச் சட்டமானது திருத்தப்படுகின்றது.

20. முதன்மை நியதிச் சட்டத்தின் V ஆம் பகுதியின் 34 ஆம் பிரிவின் ஆரம்பத்தில் "நிதி ஒழுங்கு விதிகளும் தாபன ஒழுங்கு விதிகளும் அடங்கலாக" என்னும் சொற்களைச் சேர்ப்பதன் மூலம் திருத்தப்படுகின்றது.

*முதன்மை நியதிச் சட்டத்தின் 42 ஆம் பிரிவைப் பதிலீடு செய்தல்.*

21. முதன்மை நியதிச் சட்டத்தின் 42 ஆம் பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவை பதிலீடு செய்வதன் மூலமும் திருத்தப்படுகின்றது.

"பொருள் கோடல்.

42. இந்த நியதிச் சட்டத்தில் வேறு விதத்தில் பொருள் கோடப்பட்டிருந்தால் தவிர,

"ஆளுநர்" என்னும் போது வடமேல் மாகாணத்தின் ஆளுநர் எனப் பொருள்படும்.

"கைத்தொழில் சேவைகள்" என்னும் போது வர்த்தக அபிவிருத்திச் சேவையும் அடங்கும்.

"மாகாண சபை" என்னும் போது வடமேல் மாகாண மாகாண சபை எனப் பொருள்படும்.

"முதலமைச்சர்" என்னும் போது வடமேல் மாகாணத்தின் முதலமைச்சர் எனப் பொருள்படும்.

"மாகாணம்" என்னும் போது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாணம் எனப் பொருள்படும்.

"தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்னும் போது,

(அ) இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவனத்தில் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவனம் ஒன்றில் உறுப்பினர் ஒருவர், கணக்காளர் ஒருவராக தொழிலில் ஈடுப்படுவதற்கு இந்த நிறுவனத்தின் சபையினால் வழங்கப்பட்ட சான்றிதழை கொண்டுள்ள ஒருவர் ;

(ஆ) ஏதேனும் கணக்காளர் நிறுவனமொன்றின் ஒவ்வொரு வதிவிட பங்காளர் இலங்கைப் பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவனத்தில் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவனம் ஒன்றில் உறுப்பினர் ஒருவர் அதே போன்று கணக்காளர் ஒருவராக தொழிலில் ஈடுப்படுவதற்கு இந்த நிறுவனத்தின் சபையினால் வழங்கப்பட்ட சான்றிதழை கொண்டிருக்கும் அத்தகைய பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனம்

எனப்பொருள்படும்.

"முயற்சித்தல்" என்னும் போது ஊக்குவித்தல் எனப் பொருள்படும்.

"தொழில் முயற்சிகள்" என்னும் போது கமத்தொழில், கடற்றொழில், கால்நடை வளர்ப்பு, வர்த்தகம், வியாபாரங்கள் மற்றும் சேவைகள், கைத்தொழில்கள் எனப் பொருள்படும்.

*22.* முதன்மை நியதிச் சட்டத்தின் *42* ஆம் பிரிவுக்கு உடனடுத்து *43* ஆம் பிரிவாகப் பின்வரும் பிரிவைப் புதிதாக சேர்ப்பதன் மூலம் முதன்மை நியதிச் சட்டமானது திருத்தப்படுகின்றது :-

*முதன்மை நியதிச் சட்டத்தின் 43 ஆம் பிரிவைப் புதிதாகச் சேர்த்தல்.*

"*43.* இந்த நியதிச் சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்கும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

09-365

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.